*11*

# கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவன், 1

## (3:1-4)

### மேலானவைகளைத் தேடுதல் *(3:1-4)*

***[1]நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். [2]பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். [3]ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. [4]நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்.***

***"நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால்" (3:1அ)***

*கொலோசெயரில், பிற சபைகளுக்கு அவர் எழுதின மற்ற பெரும்பாலான நிருபங்களில், போலவே, பவுல் முதலாவதாக அஸ்திபாரமிட்டு, பின்பு அந்த அஸ்திபாரத்தின் மேல் எப்படிப்பட்ட வாழ்க்கையை உபதேசக் கோட்பாடுகளின் ஆலோசனையில் கட்டி எழுப்ப வேண்டுமென்பதை விவரித்தார். ஆங்கிலத்தில் ஆகையால் எனும் வார்த்தையுடன் இந்த வசனம் தொடங்குகிறது, அது பவுல் இதே அமைப்பை 3:1ல் பயன்படுத்துகிறார் என்பதை சுட்டிக்காட்டுகிறது.[1]*

*கொலோசெயர் 3:1-4 துவக்கத் பகுதியில் பவுல் எழுதியவைகளிலிருந்து (1:12-2:23) நிருபத்தில் பின்பகுதியாகிய நிருபத்தின் சரீரப் பகுதியில் காட்சி மாறுவதைக் காட்டுகிறது (3:5-4:6). 2:8-23ல் தத்துவம் மற்றும் கள்ள உபதேசத்தைக் குறித்து தனது விவாதத்தை நிறைவு செய்தார் அதன் பிறகு கிறிஸ்துவுக்குள் இருக்கும் புதிய ஜீவனைக் குறித்தும் அதன் வளர்ச்சி ம ற்றும் குணாதிசயம் குறித்தும் விவாதிக்கத் துவங்குகிறார். கொலோசெயர்கள் தத்துவங்களுக்கும் உலக வழிபாடுகளுக்கும் ஊழியஞ் செய்ய வேண்டுவதில் லை என்று 2:20-23ல் விளக்கப்படுத்தின பின்பு, கிறிஸ்தவர்கள் என்ன செய்ய வேண்டும் எவைகளைச் செய்யக் கூடாது என்ற நேர்மறை மற்றும் எதிர்மறைக் கட்டளைகளை 3:1-14ல் கொடுத்தார்.*

*பவுல் ஒரு பகுதியை எழுதத் துவங்கும் போது, "ஆகையால்," என்று குறிப்பிட்டு ஏற்கனவே அவர் சொன்னவைகளைச் சுட்டிக் காட்டுகிறார். கொலோசெயிலிருந்த கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுடனே கூட மரித்திருந்தார்கள் (2:20) மேலும் ஞானஸ்நானத்திலே அவரோடே கூட எழுந்தும் இருந்தார்கள் (2:12, 13). ஞானஸ்நானம் பண்ணப்பட்டதால், அவர்கள் இயேசுவின் மரணம் அடக்கம், உயிர்த்தெழுதலில் பங்குடையவர்களாக, அதன் மூலம் அவர்கள் ஆவிக்குரிய வகையில் ஜீவனுள்ளவர்களானார்கள். பவுல் இப்பொழுது இந்தக்*

கருத்துக்குத் திரும்பி கிறிஸ்துவுடனான காரியங்களில் அனுபவம் பெற்றபின்பு தொடரவேண்டிய மறுரூபத்தைக் குறித்து விவாதிக்கிறார்.

வசனம் 1ல் நிபந்தனையுடன் கூடிய சொல் வகையில் உண்டான "னால்" (ஆல்) என்பது வசனம் 2:20ல் சொல்லப்பட்டதைப்போலவே கொலோசெயர்கள் கிறிஸ்துவுடனே கூட எழுந்திருந்தார்கள் என்பதை சந்தேகத்துடன் மறைமுகமாகக் கூறவில்லை. மாறாக, அது பவுல் அறை கூவலாக அவர்களுக்குச் சொன்னபடி, தாங்கள் கிறிஸ்துவுடனே கூட எழுப்பப் பட்டபோது ஞானஸ்நானத்திலே பெற்ற புதிய ஜீவன் மூலம் அந்த அறைகூவலை பின்பற்றும்படிக் குறிப்பிட்டார். "ஆல்" என்ற வார்த்தை "லிருந்து" என்றும் மொழிபெயர்க்கப்படலாம். இந்த ஆணித்தரமான கருத்தை விவாதித்தபின், பவுல் மேலானவைகளைத் தொடர்ந்து தேடும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார். அவரோடே கூட புதிய ஜீவனுக்குள் பிரவேசித்திருந்த அவர்கள், "மேலான காரியங்களுக்காக" வாழ வேண்டியவர்களாயிருந்தனர்.

கிறிஸ்துவுடன் கூட **எழுப்பப்படுவதற்கு முன்,** இந்த நபர்கள் தனிப்பட்ட ரீதியில் அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாயிருந்தனர். அது அவர்களை பாவத்துக்கு மரிக்கச் செய்திருக்க வேண்டும் (ரோமர் 6:1-6; காண்க 3:3, 4ஆ வில் "அவரோடேகூட" எனும் விவாதம்) கூடவே உலகத்தின் சட்டதிட்டங்களுக்கும் மரித்தவர்களாயிருந்தார்கள். பவுல் இரண்டு முன்னதாக ஆராயப்பட வேண்டிய வார்த்தைகளைக் குறிப்பிட்டார்: அவர்கள் கிறிஸ்துவுடனே கூட மரித்தார்கள் மேலும் கிறிஸ்துவுடனே கூட எழுந்துமிருந்தார்கள் (கொலோசெயர் 2:12, 20). அவருடன் மரித்ததின் மூலம், அவர்கள் தங்களை உலக ஞானத்திலிருந்தும் பூமிக்குரிய வாழ்க்கையின் அணுகுமுறையிலிருந்தும் தங்களைத் துண்டித்துக் கொண்டிருந்தனர்.

அவர்களுடைய புதிய பார்வை கிறிஸ்து, ஆதலால், அவர் இருக்கும் இடமாகிய பரலோகத்தின் நிஜத்தையே தேட வேண்டியவர்களாயிருந்தனர். அவர்களுடைய பார்வை உலகப்பிரகாரமானவைகளைக் காணும்படி கீழ்நோக்கி அல்ல, மேல்நோக்கிப் பார்க்கப்பட வேண்டிய கிறிஸ்துவும் அவருடைய உபதேசங்களும்தான். அவர்களுடைய மனம் திருப்பு முனையைப் பெறுதல் தன்னிச்சையாய் வந்து விடாது; அது அவர்கள் பகுதியில் பிரயாசப்பட வேண்டியதாகும். புதிய ஆர்வங்கள் அவர்களின் சிந்தனைகளைக் கட்டுப்படுத்த வேண்டியிருந்தன.

ஞானஸ்நானத்தின்போது வரும் மறுரூபத்தை J. B. Lightfoot இவ்வாறு விவரித்திருக்கிறார்:

> ஞானஸ்நானத்தில் சம்பந்தப்படும் மாற்றம், உண்மையில் உணரப்படுமானால், ஒரு மனுஷனுடைய முழு இயல்பும் ஊடுருவி பரவும். அது அவனுடைய அன்றாட நடத்தையை மாத்திரமல்ல, அறிவுக் கூர்மையிலும் மாறுதலைக் கொண்டு வருகிறது. அது ஒரு புதிய எல்லைக்குள் மாறிப்போய் இருப்பதைவிட குறைவானதல்ல. அவன் பூமியிலிருந்து பரலோகத்திற்குள் உட்படுத்தப்பட்டிருக்கிறான்; மற்றும் இந்த மாற்றத்தில் அவனுடைய கருத்துக் கண்ணோட்டம் பண்பு நிலையை மாற்றுகிறது, அவனுடைய தீர்மானிக்கும் அளவுகோல்

> முற்றிலுமாக மாற்றம் பெறுகிறது. பரு பொருள் அவனுக்கு இனியும் ஒரு எதிரியல்ல; அதைக் குறித்த எண்ணம் ஒரு முற்றுப் பெற்ற சம அளவையுடையதாயிருக்கிறது. சுயம் வெறுத்து உடல் வருத்தும் சட்டங்களும், சடங்காச்சார ஆசரிப்புக்களும் எவ்வித மதிப்புமின்றி ஒழிந்து போயின, அது எவ்வளவு பாதிப்பை மக்களுக்குள் ஏற்படுத்தியிருந்தாலும் ஒழிந்து போகவே செய்தது, இவைகளனைத்தும் பூமிக்குரியது, பூமிக்கடுத்த செயல். பருபொருள், தோன்றிமறைகிற தன்மை, உலகியல் வாழ்க்கை, ஆகியவை ஒழுக்கம், நித்தியம், பரலோகத்திற்குரியவைகளுக்கு இடமளித்து மறைகின்றன.[2]

கிரேக்க வார்த்தையில் "எழுப்பப்பட்டீர்கள்" எனும் சொற்றொடர் *sunegeirō* அது 2:12ல் காணப்படுகிற அதே வார்த்தைதான், அங்கே "எழுந்தவர்களாயும் இருக்கிறீர்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அது செயல் முடிந்த காலத்தில் பேசுகிறது. "கிரேக்க மொழியில் நிலை பேறுடமை பிரிவில் சொல்லப்படும் பதம் *(ei)* என்பது நிலை நிறைவேறிவிட்டது,"[3] என்பதாகும். அவர்கள் "கிறிஸ்துவுடன்" உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறார்கள் கொலோசெயர்கள் தங்கள் சிந்தனையை மறுபடியும் வழிகாட்டவேண்டியவர்களாய் தங்கள் மனதை அவர் மீது குவிக்க வேண்டியவர்களாய் அவரோடு தங்கள் நட்பை வளர்த்துக் கொள்ள வேண்டியவர்களாய் இருந்தார்கள்.

இந்த சகோதரர்கள், உலகப்பிரகாரமான காரியங்களை இனியும் தேடக்கூடாதவர்களாயிருந்தனர் (2:20). இப்போது அவர்கள் பரலோகத்தின் விலைமதிப்புள்ளவைகளைத் தேட வேண்டியவர்களாயிருதார்கள் (3:1). அவர்கள் வேறுபக்கம் நோக்குவதால் "மாம்ச காரியங்களுக்கு இடங்கொடுக்காதிருத்தல்" (2:23) என்ற பிரச்சனையை சந்திக்கிறவர்களாகவும் இயேசுவின் மேல் தங்கள் பார்வையை நிலைநிறுத்துகிறவர்களாகவும் (எபிரெயர் 12:1, 2) இருக்க வேண்டியவர்களாயிருந்தனர். அவர்கள் கிறிஸ்துவின் பண்புகளை எடுத்துக் கொள்ளத் தக்கதான அப்பணிக்கப்பட்ட வாழ்வின் புதிய கண்ணோட்டத்தை மகிமைப்படுத்தப்பட்டுள்ள உற்பத்தி செய்யக் கூடியவர்களாயிருந்தனர்.

### "கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்" (3:1ஆ)

இயேசுவோடு கூட எழுந்ததினால் அதன் பலனாக, கொலோசெயர்கள் தங்களுடைய மனதை ஆவிக்குரிய விஷயத்திற்குத் திரும்ப வேண்டியவர்களாயிருந்தார்கள். *Zeteite* எனும் வார்த்தை **தொடர்ந்து தேடுங்கள்** என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது ஒரு தொடர் நிகழ்ச்சியாக செயல்பட வேண்டியதை வெளிப்படுத்துகிறது. இதன் பொருள் தொடர்ந்து எதிர்நோக்கிக் கொண்டிருத்தல், தேடிக் கொண்டிருத்தல், கண்டுபிடிக்க பிரயாசப்படுதல் என்பதாகும். பவுலின் நிருபத்தைப் பெற்றவர்கள் பரலோக சிந்தையை கண்டு பிடிப்பது மட்டுமல்ல, அதை அடைந்து கொள்ளவும், அதேபோல அவர்கள் விசுவாசத்தில் நிலைத்திருக்கவும் (1:23), மேலானவைகளை தொடர்ந்து தேடவும்

*வேண்டியவர்களாயிருந்தார்கள்.*

*இங்கே anō எனும் வார்த்தை "மேலான" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, அதே விதத்தில் யோவான் 8:23லும், கலாத்தியர் 4:26லும், மற்றும் பிலிப்பியர் 3:14லும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.* **மேலானவைகள்** *எனும் சொற்றொடர் புதிய ஏற்பாட்டில் வேறெங்கும் காணப்படவில்லை. தங்களுடைய புதிய நட்புறவை முறையாக கண்ணுறும்படி, கொலோசெயர்கள் தங்கள் கண்களை இவ்வாழ்வின் குப்பையிலிருந்தும் சகதியிலிருந்தும் திருப்பி செயல்பாட்டுடன் புதிய ஜீவனைப் பற்றிக் கொள்ள வேண்டும். புதிய கிறிஸ்தவர்களுக்கு, அவர் சொல்லும் காரியம் என்னவெனில் அவர்கள் பூமிக்குரிய கடமைகளுக்கு கண்களை மூடிக் கொள்ளவும் ஆவிக்குரியவைகளை மட்டும் சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதல்ல; புதிய ஜீவனை அவர்கள் ஒரு தெய்வீக கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும் என்பது தான் இதன் பொருள்.*

*கிறிஸ்தவர்களாகிய நாம், நமது முந்நுரிமைகளில் சரிசம நிலையைக் கொண்டிருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். நாம் பரலோகத்திற்குரிய காரியங்களுக்கு கவனம் செலுத்தக் கூடாத அளவுக்கு உலகக் காரியங்களில் சிக்கிக் கொண்டவர்களாகிவிடக் கூடாது, அதே வேளையில் பரலோகக் காரியங்களில் மிக அதிகமாய் உட்படுத்திக் கொண்டு உலகக் காரியங்களில் பொறுப்பற்றவர்களாக இருந்து விடக் கூடாது. சரியான சரிசம நிலையைக் காத்துக் கொள்வது என்பது தேவபக்திக்குரிய நோக்கங்களை நம்முடைய பூமிக்குரிய பொறுப்புக்களோடு சம்பந்தப்படுத்தி அடைய வேண்டியது.*

*நாம் சரீரத்திலே இயேசுவைக் காண முடியாது, ஆகிலும் அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார் என நம்மால் உணரமுடியும். பரலோக நிலையில், இயேசு தூய்மையானவைகளும் பாவமற்றதுமான காரியங்களால் மட்டுமே சூழப்பட்டிருக்கிறார். அவரைப் பின்பற்றிப் போகிறவர்களாக, நாம் நம்மையே கண்டு அவரோடு கூட அடையாளப்படுத்தி இப்பொழுது அவரைச் சூழ்ந்து கொண்டுள்ள பரிசுத்தத்திலும் காணப்பட வேண்டும்.*

*கொலோசெயர் நிருபத்தை பவுல் எழுதின போது, இயேசு பூமிக்கு வருவதற்கு முன் தாம் இருந்த ஸ்தலத்தில் இருந்தார். அவர் உயிர்த்தெழுந்த பின்பு நாற்பது நாட்கள் கழித்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருந்து ஆளுகை செய்யும் பொருட்டு பூமியிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டார் (நடபடிகள் 1:3, 9-11), அந்த ஸ்தலம் உச்சக்கட்ட கனத்திற்குரியது. வேறெந்த ஜீவிகளுக்கும் தேவதூதர்களுக்குக்கூட இப்படிப்பட்ட அதிகாரம் கொடுக்கப்படவில்லை (எபிரேயர் 1:13). இயேசு தேவனுடைய வலது பாரிசத்தில் முடிசூடப்படுவார் என்பதை தாவீது முன்னுரைத்தார் (சங்கீதம் 110:1), இயேசு இந்த வசனத்தை தமக்கு ஒப்பிட்டார் (மத்தேயு 22:44; 26:64; மாற்கு 12:36; லூக்கா 20:41-44). அவர் பரமேறிச் சென்ற பிறகு, அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்திகும் காட்சி ஒரு ஸ்தாபிக்கப்பட்ட உண்மையாக குறிப்பிடப்படுகிறது.*[4]

*இயேசு உயிர்த்தெழுந்து, பரமேறி, தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்த பொழுது, சகலமும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தப்பட்டன (எபேசியர் 1:20-23), அதில் "தேவதூதர்களும்*

*அதிகாரங்களும், வல்லமைகளும் உள்ளடக்கம்" (1 பேதுரு 3:22). அப்பொழுதிலிருந்து அவருடைய ராஜ்யமும் ஆளுகையும் நிலைத்திருக்கிறது (கொலோசெயர் 1:13). அவர் இப்பொழுது சகலத்தையும் பிதா ஒருவரைத்தவிர மற்ற எல்லாரையும் ஆண்டு கொண்டுள்ளார். அவர் தமது இரண்டாம் வருகை வரைக்கும் ஆளுகை செய்வார், அதன் பிறகு பிதாவினிடத்தில் தமது ராஜ்யத்தை ஒப்புக் கொடுப்பார் (மத்தேயு 13:41-44; 1 கொரிந்தியர் 15:23-28). அவர் மறுபடியும் வரும்போது, இரட்சிக்கப்பட்டவர்களில் - உயிர்த்தெழுந்து வரப்போகிறவர்களும் (உலகில்) உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களுமாகிய அனைவரும் - அவரை மேகத்தில் சந்தித்து அவரோடே கூட பரலோக்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவோம் (1 தெசலோனிக்கேயர் 4:15-17).*

***"பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்" (3:2)***

*கொலோசெயர்கள் கைகளால் கெடுக்கப்பட இயலாததும் இயேசு வாசம் பண்ணுகிறதுமான இடத்திலுள்ள மேலானவைகளையே நாட வேண்டியவர்கள். அவர்கள் கவனம் செலுத்த வேண்டியது பூமிக்குரியவைகளிலா அல்லது பரலோகத்திற்குரியவைகளிலா என்று தெரிவு செய்து கொள்ளும்படி கோரப்பட்டனர். ஒரு இருப்பிட நிலையிலுள்ள வாழ்வில் அக்கறைகாட்டும் அளவுக்கு இருப்பிடநிலையை பவுல் சிந்திப்பதில்லை. வித்தியாசம் என்னவெனில் குறுகிய காலத்துக்குரியதும், முக்கியத்துவமற்றதுமான* **பூமியிலுள்ள பாவக்காரியங்களுக்கும்** *பரிசுத்தமுள்ளதும் நிலையானதுமான நித்தியத்திற்கும்* ***மேலானவைகளுக்கும்*** *இடையிலானது.*

***நாடுங்கள்*** என்பது கிரேக்க மொழியில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த, *phroneite,*லிருந்து மொழிபெயர்க்கப்பட்ட சொல். இந்த இடத்திலும் பிற *வசனப்பகுதிகளிலும் (ரோமர் 12:16; பிலிப்பியர் 3:19), (ஏதோ ஒன்றுக்கு) மிகவும் கவனம் செலுத்து, "ஒருவருடைய மனதை அதிலே வை, ஆர்வமுடன் பார்வையைச் செலுத்து."*[5] என்று பொருள்.

KJV *எனும் மொழிபெயர்ப்பு* "set your affection" என்பதறாக *மிக அதிகமான உணர்ச்சி வசப்படுதலை வலியுறுத்துகிறது. பவுல் கொலோசெயர்கள் நாட வேண்டியவைகளில் அக்கறையுள்ளவராயிருந்தார். அவர்கள் பரலோகத்திற்குப் போவதற்காக தேடுவதைக் காட்டிலும் அதிகமாக செய்ய வேண்டியவர்களாயிருந்தார்கள்; தேவபக்திக்குரிய பரேலாகத்திற்குரிய தன்மையே அவர்களுடைய சிந்தனையின் மையமாக இருக்க வேண்டும். கொலோசெயர்கள் "மேலானவைகள்" என்பது சரீரப் பிரகாரமான உலகத்தைக் குறிப்பிடுவதில்லை, என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும்படியாக அதை அவர் "கிறிஸ்து வீற்றிருக்கிற" இடத்திலுள்ள என்ற வார்த்தையால் தகுதிப்படுத்தினார் (3:1).*

*பாவம் ஆளுகின்ற அரங்கம் "பூமி," "மேலானவைகளோ" உச்சக் கட்ட பரிசுத்தம் நிறைந்த இடத்தில் இருப்பவை. நாம் எப்படிப்பட்ட கிறிஸ்தவர்களாக வாழுகிறோம் என்பது நம்முடைய கண்ணோட்டத்தால் தீர்மானிக்கப்படுகிறது. நாம் இந்த உலகத்திற்குரிய காரியங்களில்*

*அக்கறை காட்டுவோமாகில், நாம் பூமிக்குரிய சிந்தையுடையவர்களும், உலகத்துக்குரிய ஜனங்களைப்போல வாழக்கூடியவர்களாயுமிருப்போம். நாம் பரலோகத்துக்குரியவைகளிலே நமது மனதை வைப்போமானால், நாம் தெய்வீகத் தன்மை பெற்று உலகத்திற்குரிய விளக்கங்களால் கட்டுப்படுத்தப்படாமல் இவ்வாழ்க்கையை வாழ்வோம். கொலோசெயர்களைப் போலவே, நமது கடமை என்னவெனில், நமது மனதைக் கட்டுப்படுத்தி, ஆவிக்குரியவைகளல்லாதவைகளையும் வாழ்க்கையில் சோதனைக்குட்படுத்தும் விஷயங்களையும் தவிர்க்கவும், ஆவிக்குரியவைகள் மீது தமது கவனத்தைத் திருப்பவும் வேண்டும்.*

*பாவச்செய்கைகளை நாம் நம்முடைய சிந்தைகளிலிருந்து தவிர்க்க வேண்டியதாயிருந்தாலும், இது போதுமானதல்ல, தீய செயல்களிலிருந்து விடுபட்டுள்ள ஒரு மனம் ஒழுக்கங்களால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும் என்று அவசியமில்லை. ஆவிக்குரிய சிந்தையாலும் வாழ்வாலும், எதிர்மறை செயல்பாடுகள் நீக்கப்படக் கூடும். தீமையை அகற்றுவதற்கான வழி நல்லவைகளைச் சிந்தித்துக் கொண்டிருப்பதுதான். இந்தக் கருத்தையே பவுல் ரோமர் 12:21; 13:14; 2 கொரிந்தியர் 3:18; மற்றும் கலாத்தியர் 5:16 ஆகிய வசனங்களில் வெளிப்படுத்தினார்.*

*பிலிப்பியர்களுக்கு எழுதியபோது, பவுல் பூமிக்கடுத்தவைகளை சிந்திக்கிறவர்கள் சிலுவைக்குப் பகைஞர்கள் என்றார் (பிலிப்பியர் 3:18, 19). அதே நிருபத்தில், அவர்களுடைய மனம் எவைகளில் வாசம் பண்ண வேண்டும் என்று நேர்மறையான கருத்துக்கள் கொண்ட ஒரு பட்டியலையே கொடுத்தார் (பிலிப்பியர் 4:8). யாக்கோபு பூமிக்குரியதும் பிசாசுக்கடுத்தவைகளுமான எண்ணிக்கையுள்ள கிரியைகளை பரலோகத்திற்குரியவைகளுக்கு முரணாக வரிசைப்படுத்துகிறார் (யாக்கோபு 3:14-18).*

### *“ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது” (3:3)*

*கொலோசெயர்கள் மரித்தும் பிழைத்துமிருந்தார்கள் (2:13, 20). அவர்கள்* ***மரித்திருந்தார்கள்*** *(apothnēskō). இந்த வினைச்சொல் முற்று பெற்ற உறுதியான செயல்களை வெளிப்படுத்துகிறது, ஆகிலும் இந்த சகோதரரில் சிலர் தாங்கள் ஒருவகையில் ஆவிக்குரிய வகையில் மரித்திருந்தார்கள் என்பதை உணருவதற்கு சிரமப்பட்டார்கள். இந்தக் கருத்தை பவுல் அவர்களுடைய மனதிலே ஆழமாக பதியவைக்கவும் அவர்களுடைய மரணத்தின் விளைவுகளை வலியுறுத்தவும் அவைகளை மறுபடியும் குறிப்பிட்டார். அவர் உங்கள் ஜீவன் என்று பன்மையுடன் ஒருமையை பயன்படுத்தியிருக்கிறார் (“உங்கள் [பன்மை] ஜீவன்” பன்மையில் “உங்கள் ஜீவன்கள்” என்று சொல்லுவதற்குப் பதிலாக) அப்படிக் குறிப்பிடுவது பொதுவாக கிரேக்கப் பயன்பாட்டில் இருந்தது.[6] கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குள் தங்களுடைய புதிய ஜீவனை பகிர்ந்து கொண்டார்கள்.*

*அவர்கள் தங்களுடைய முந்தின வாழ்க்கையில் அக்கிரமகிரியைகளினாலே ஆவிக்குரிய முறையில் மரித்தவர்களாய் கிறிஸ்துவிலிருந்து தங்களைப் பிரித்துக் கொண்டிருந்தாலும் (1:21), கொலோசெயர்களோ அவரோடு கூட கொண்டிருந்த புதிய நட்புறவில் பிழைத்திருந்தார்கள், அவருடைய இரத்தத்தினாலே ஒப்புரவானார்கள்.* William Hendriksen *“ஏற்கனவே*

*விளக்கப்படுத்தப்பட்ட பொருளில் (2:11, 12ல் காண்க) கொலோசெயர்கள் மரித்து அடக்கம் பண்ணப்பட்டிருந்தார்கள். இனி வாழ்வது அவர்களல்ல கிறிஸ்துவே அவர்களுக்குள் வாழ்கிறார். அவர்கள் தங்களுடைய பழைய மனுஷனுக்காகவும் பாவத்தால் கட்டுண்டிருந்த உலகத்துக்காகவும் மரித்திருந்தார்கள்,"*[7] என்று எழுதினார்.

ஞானஸ்நானம் என்ற செயலில் அவர்கள் மரித்திருந்தார்கள். இந்த உண்மை 2:12ல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் ரோமர் 6ல் மிகவும் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. இங்கே "பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?" என்று பவுல் கேட்டார் (வசனம் 2). அதற்குப் பதிலாக அவரே, "அவருடைய மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்" என்றார் (வசனம் 4இ) கொலோசெயிலிருந்த கிறிஸ்தவர்கள் இப்பொழுது, முன்பு இருந்த, தங்கள் வாழ்க்கையின் உலகக் காரியங்களுக்காக மரித்திருந்தார்கள். ஞானஸ்நானத்திற்கு முன்பு வரை தங்களுடைய வாழ்க்கையை வாழ்ந்த விதத்தில் தேவனுக்கு முன்பாக மரித்தவர்களாயிருந்தார்கள். இப்பொழுது இயேசுவின் மரணத்துடனான அடையாளப்படுத்துதலால், அவர்களின் கடந்த காலத்துக்கு மரித்தவர்களாயிருந்தார்கள். தேவனுக்குள் அவர்கள் ஒரு புதிய ரீதியை அடைந்துள்ளனர், கிறிஸ்துவுடன் சேர்ந்து, இந்த வாழ்க்கையில் வீசும் தீமையான புயலுக்கு அடைக்கலம் பெற்றுள்ளனர்.

**மறைந்திருக்கிறது** *(kruptō)* என்பது நிறைவு பெற்ற ஒரு செயலின் தொடர் விளைவை குறிப்பிடுகிறது. அவர்களுடைய ஜீவன் **தேவனுக்குள் கிறிஸ்துவிலே** மறைந்திருந்தது, தொடர்ந்து மறைந்திருக்கும், அவர்கள் கிறிஸ்துவுக்குள் இருப்பதால் அவர்கள் "தேவனுக்குள் கிறிஸ்துவுடன்" இருந்தார்கள் (2 கொரிந்தியர் 5:17) மேலும் அவர் தேவனுக்குள் இருக்கிறார் (யோவான் 10:38; 14:10, 11, 20; 17:21). ஒருவகையில், அவர்கள் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டிருந்தபடியால் உலகம் அவர்களைக் காணவில்லை (கலாத்தியர் 3:27). அவர்கள் "மறைக்கப்பட்டிருக்கிறார்கள்" என்ற உண்மையானது உலகம் அவர்களைப் பார்க்கவே முடியாது என்ற பொருளில் குறிப்பிடுவதில்லை; உலகம் கிறிஸ்துவைப் பார்த்தது, அவருடன் அவர்கள் அவரைத் தரித்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த கிறிஸ்தவர்கள் "உலகத்துக்கு வெளிச்சமாயிருந்தார்கள். மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது" (மத்தேயு 5:14). அவர்கள் முழுமையாய் உலகத்திற்கு மறைக்கப்பட்டவர்களாயிருந்தால் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்க முடியாது. அவர்கள் பண்டிகை விசேஷ ஆடையாகிய, கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டிருப்பதை உலகம் பார்க்க வேண்டியது அவசியமாயிருந்தது (மத்தேயு 22:11, 12; கலாத்தியர் 3:27). அவரே வெளிச்சமாயிருக்கிறார் (யோவான் 8:12), அதிலே அவர்கள் முற்றிலும் மறைக்கப்பட்டிருக்கிறார்கள். இனி அவர்கள் இருளாயிராமல் கர்த்தருக்குள் ஒளியிலே இருக்கிறார்கள் (எபேசியர் 5:8), உலகத்திலே சுடர்களைப் போல பிரகாசிக்கிறார்கள் (பிலிப்பியர் 2:15ஆ).

"தேவனுக்குள் கிறிஸ்துவிலே மறைந்திருத்தல்" என்பது அவர்கள் தேவனுடைய பராமரிப்பின் பாதுகாப்பில் இருக்கிறார்கள்

*(1 கொரிந்தியர் 10:13), உலகத்தின் சீரழிக்கும் பழக்கங்களிலிருந்து மறைந்திருக்கிறார்கள் பழைய ஏற்பாடு ஒளிந்து கொள்ளக் கூடிய இடமாக தேவன் இருக்கிறார் என்றும் (சங்கீதம் 17:8; 31:20; 64:2), அவருடைய ஜனங்களுக்கு அவர் அடைக்கலமாயிருக்கிறார் (சங்கீதம் 61:2, 3), என்ற கருத்தையும் கொடுக்கிறது. இந்த பாதுகாப்பு அரணில் பாவம் எனும் சூறாவளிக்கும் உலகத்தின் துன்பங்களுக்கும் பாதுகாப்பாய் நிலைத்திருந்தனர். அவர்கள் தங்கள் பாதுகாப்பின் கன்மலையான கிறிஸ்துவோடும் தங்களுடைய புகலிடமாகிய தேவனுக்குள்ளும் இருந்தார்கள்.*

*கொலோசெயர்கள் தாங்கள் மறைக்கப்பட்ட ஸ்தலத்தில் பாதுகாப்பாய் இருக்கிற வரை, சாத்தானின் வலிந்து ஈர்க்கும் சக்திகள் அவர்களை மேற்கொள்ளவோ அவர்களை அடிமைகளாக்கிக் கொள்ளவோ திராணியுள்ளவைகளாக மாட்டாது (1 யோவான் 3:6, 9; ஒப்பீடுக 1 பேதுரு 1:23). தீய சக்திகளை இயேசு வெற்றி சிறந்திருப்பதால் (கொலோசெயர் 2:15), அவர்களும் மேற்கொள்ளும்படி உதவி செய்ய முடியும் (1 யோவான் 4:4). வெற்றிசிறந்தவருக்குள் அவர்கள் பாதுகாப்பாக நிலைத்திருந்தால், அவர்களும் வெற்றி சிறப்பார்கள். அவர்கள் தங்களுடைய மறைவிடமாகிய இயேசுவிடமிருந்து பிரித்துக் கொண்டு போய் தங்களுக்கு அடிமையாக்கிக் கொள்ள யாரையும் எதையும் அனுமதித்துவிடக் கூடாது (கொலோசெயர் 2:8).*

*"கிறிஸ்துவுடன் கூட" (sun ... Christō) எனும் பதத்தை இங்கு மட்டுமே பவுல் இந்த அர்த்தத்தில் பயன்படுத்தினால் அவர் அடிக்கடி "கிறிஸ்துவுடன்" என்று பெரும்பாலும் எழுதாமல் "கிறிஸ்துவுக்குள்" என்றே எழுதினார். ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய ரீதிக்குள் பிரவேசிக்க "கிறிஸ்துவுக்குள்ளாக" வேண்டும். இதே நிலையை "தேவனுக்குள்" இருப்பதாக விளக்கப்படுத்துவதில் புரிந்து கொள்வதில் பிரச்சனை இல்லை ஏனெனில் கிறிஸ்து "தேவனுக்குள்" இருக்கிறார் (யோவான் 10:38; 14:11, 20; 17:21); "கிறிஸ்துவுக்குள்" இருக்கிறவர்கள், ஆவிக்குரிய பொருளில், தேவனுக்குள்ளும் இருக்கிறார்கள்.*

***"நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து" (3:4அ)***

*3:1-4ல்* **கிறிஸ்து** *எனும் பட்டத்தை பவுல் நான்கு முறை பயன்படுத்தியிருக்கிறார், பிரதி பெயர்ச்சொல் பயன்படுத்தப்படவில்லை. இப்படிப்பட்ட வழக்கத்துக்கு மாறான திருப்பித் திருப்பி பேசும் செயல் வலியுறுத்தலுக்காகவே. கொலோசெயர்களின் வாழ்க்கை கிறிஸ்துவுக்குள் மறைந்திருப்பதால், ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும் போது, அவர்களும் அவரோடே கூட மகிமையிலே வெளிப்படுவார்கள் என்று பவுல் சொன்னார் (வசனம் 4ஆ) இப்படியாக, பவுல் இம்மைக்குரிய இவ்வாழ்க்கைக்கும் எதிர்கால வாழ்க்கைக்கும் இணைப்பை ஏற்படுத்துகிறார். இப்பொழுது கிறிஸ்துவோடு கூட இருப்போர் (வசனம் 4அ) அவர் மறுபடியும் வரும்போது அவரோடே கூட இருக்கும்படி தம்மோடு கூட கொண்டு வருவார் (4ஆ). கடந்து போகும் இந்த உலகம் அகற்றப்படும் போது, அவர்கள் மகிமையுள்ள இயேசு வரும் போது அவரோடே இருப்பார்கள், கொலோசெயரில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றி குறிப்பிடும் ஒரே வசனம் 4ஆ.*

*கொலோசெயர்களின் ஜீவன் கிறிஸ்துவுடனே மறைந்திருக்க மற்றொரு*

*காரணம்* ***அவரே நம்முடைய ஜீவனாயிருக்கிறார்:*** *மூலாதாரமும், மையமும், ஜீவஊற்றுமாக அவர் இருக்கிறார் (1 யோவான் 5:12).*[8] *அவரிடத்திலிருந்து வரும் ஜீவன் மட்டுமல்ல, அவரோடே பகிர்ந்து கொள்வது மட்டுமல்ல, மாறாக கிறிஸ்தவர்களுக்கு அவரே ஜீவனாயிருக்கிறார். இயேசு திராட்சச் செடியாயும், கிறிஸ்தவர்கள் கொடியாயும் இருக்கிறார்கள் (யோவான் 15:5). கொடிகள் செடியோடு கொண்டுள்ள தொடர்பால் அவை உயிருள்ளவைகளாயிருக்கின்றன. இயேசுவிலே தரித்திராத எந்தக் கொடியும் வெட்டுண்டு உலர்ந்து போகும். பிறகு, அதற்கு இனியும் ஜீவன் (உயிர்) இல்லாதபடியால், அவை சுட்டெரிக்கப்படும் (யோவான் 15:6).*

*"ஜீவன்" எனும் வார்த்தையில் சிறு மாறுதலைக் காட்டும் கிரேக்க மொழியில் "நம்முடைய (எங்களுடைய)" அல்லது "உங்களுடைய" ஜீவன் என்று சொல்லப்படக்கூடும். "நம்முடைய," hēmon பின்வரும் மொழிபெயர்ப்புக்களில் காணப்படுகிறது, வசனப்பகுதியிலோ அல்லது பக்கத்தின் எல்லைக் கோட்டிற்குள்ளோ காணப்படுகிறது:* KJV, ASV, RSV, NAB, NEB, NKJV, *மற்றும்* NRSV. *மாறுபட்ட humōn ("உங்கள்") எனும் வார்த்தை மனதைத் தொடும் எண்ணிக்கையுள்ள பிரதிகளில் காணப்படுகிறது. இந்த வாசித்தல் கிரேக்க புதிய ஏற்பாட்டு நடைமுறைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. "உங்களுடைய" எனும் வார்த்தை* NIV, NRSV, *மற்றும்* TEV, *ஆகிய மொழிபெயர்ப்புகளிலும்,* ASV *யின் எல்லை கோட்டுக்குள்ளும் காணப்படுகிறது. வசனப்பகுதியின் ஆதாரம் "நம்முடைய" என்று சொல்லுவதா; உங்களுடையது என்று சொல்லுவதா எது உறுதியான உண்மைப் பொருள் என கண்டுபிடிப்பது கடினம். முடிவில், வித்தியாசம் மிகச் சிறியது. பவுல் "நம்முடைய" என்று பயன்படுத்தியிருந்தால் கிறிஸ்துவை தங்களுடைய ஜீவனாகக் கொண்டிருக்கிறவர்களோடு அவர் தம்மையும் சேர்த்துப் பேசுகிறார். 2:13லிருந்தும் கலாத்தியர் 3:25, 26லும் மாறி "உங்களுடைய" என்பதிலிருந்து "நம்முடைய" என்று குறிப்பிட்டிருப்பது, பவுலுக்கு இது வழக்கத்துக்கு மாறானதல்ல என்பதை சுட்டிக் காட்டுகிறது.*

### *"வெளிப்படும்போது, நீங்களும் அவரோடே கூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்" (3:4ஆ)*

*கொலோசெயர்களுக்கு அப்போஸ்தலன் சொல்லும் போது, அவர்* ***வெளிப்படும்போது*** *அவரோடே கூட மகிமையிலே அவர்களும் வெளிப்படுவார்கள் என்று சொன்னார். Phaneroō எனும் கிரேக்க வார்த்தை இயேசுவின் இரண்டாம் வருகைக்கு (1 பேதுரு 5:4; 1 யோவான் 2:28; 3:2), ஒரு காட்சி கொடுப்பதற்கு (மாற்கு 16:12, 14), மற்றும் அறியப்படாதிருப்பதை வெளிப்படுத்துதலுக்கு (மாற்கு 4:22; யோவான் 1:31). பயன்படுத்தப்பட்டுள்ளது அது மேலுமாக தேவன் கடந்த காலங்களில் மறைத்து வைத்திருந்தவைகளை சம்பந்தப்படுத்தி புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வெளியாக்கப்பட்டது என்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது (கொலோசெயர் 1:26).*

***அவரோடேகூட*** *எனும் வார்த்தை இயேசுவுக்கு சம்பந்தப்படுத்தி நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் பவுலால் பயன்படுத்தப் பட்டது. கிறிஸ்தவனின் நிகழ்கால வாழ்க்கை இயேசுவோடே கூட*

பரலோகத்திற்கான வாழ்விலும் தொடருவதைக் காட்டுகிறது (பிலிப்பியர் 1:23; 1 தெசலோனிக்கேயர் 4:17). கிறிஸ்தவர்கள் "கிறிஸ்துவோடுகூட உடன் சுதந்தரர்கள்" என்றும், கிறிஸ்துவுடனே கூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனே கூட பாடுபட்டால் அப்படியாகும் (ரோமர் 8:17ஆ). என்றும் பவுல் எழுதினார். கூட ... (வெளிப்படும்) "போது" (*சண்*) என்பது ஒரு தொகுப்பு வினையாகப் பயன்படுத்தப்பட்டது, அது கிறிஸ்துவோடு கூட இருப்பதையும், ஞானஸ்நானத்திலே புதிய ஜீவனின் பங்கடைவதையும் குறிப்பிடுகிறது (ரோமர் 6:4, 5; கொலோசெயர் 2:12, 13; 3:1).

கொலோசெயர்கள் இயேசுவோடு கூட கீழ்வரும் காரியங்களில் பங்கடைந்தார்கள் அல்லது பங்கடைவார்கள்:

- அவர்கள் அடக்கம் பண்ணப்பட்டு, எழுப்பப்பட்டு, அவரோடே கூட பிழைத்துமிருக்கிறார்கள் (2:12, 13; 3:1).
- அவர்கள் உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்தவர்களானார்கள் (2:20).
- அதன் விளைவாக, அவர்கள் தேவனுக்குள் அவருடனே மறைந்திருக்கிறார்கள் (3:3).
- அவர்கள் மகிமையிலே அவருடன் வெளிப்படுவார்கள் (3:4).

இதற்கு ஒப்பான முன்னேற்ற சிந்தனையை பவுல் ரோமரில் பயன்படுத்தினார். அந்த கிறிஸ்தவர்கள், ஞானஸ்நானத்திலே, அவரோடே அடக்கம் பண்ணப்பட்டு, அவருடைய மரணத்திலே இணைக்கப்பட்டவர்களாய், அவரோடே கூட சிலுவையில் அறையப்பட்டார்கள். இப்படியாக அவரோடேகூட மரித்ததால், அவரோடேகூட பிழைத்திருப்பார்கள் என்ற நம்பிக்கை கொண்டிருந்தார்கள் (ரோமர் 6:4-8).

"அவரோடேகூட" எனும் வார்த்தை பவுல் குறிப்பிட்ட பிற இடங்களிலும் அதே பொருளையுடையது: "கர்த்தராகிய இயேசுவை எழுப்பினவர் எங்களையும் இயேசுவைக் கொண்டு எழுப்பி, உங்களுடனே கூடத் தமக்கு முன்பாக நிறுத்துவாரென்று அறிந்திருக்கிறோம்" (2 கொரிந்தியர் 4:14; காண்க ரோமர் 8:32). இயேசுவை எழுப்பின தேவன், அவரோடே கூட, நம்மையும் எழுப்புவார். 1 தெசலோனிக்கேயர் 4:14ல் அப்போஸ்தலனாகிய பவுல் எழுதினார், "இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே, அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடே கூட கொண்டு வருவார்." இந்த வசனத்தைக் குறித்து J. W. McGarvey விளக்கப்படுத்தியதாவது,

> "அவரோடேகூட" என்று சொல்லப்படுவது இங்கே இயேசு சரீரமற்ற ஆவிகளை *பரலோகத்திலிருந்து* உயிர்த்தெழுதலுக்காக கொண்டு வருவாரென்று பொருளல்ல, ஆனால் தேவன், இயேசுவை மரித்தோரிலிருந்து *(கல்லறையிலிருந்து)* எழுப்பிய அவர் நம்மையும் *கல்லறையிலிருந்து* எழுப்பி வரப் பண்ணுவார், இயேசுவோடுகூட என்ற இணைச்சொல், அதற்குள் நுழைந்தவர்கள் ஆவிக்குரிய ஜீவனில் இயேசுவோடுகூட வருவார்கள்.[9]

*கல்லறையிலிருக்கிற நல்லவர்களும் கெட்டவர்களுமாகிய அனைவரும் ஒரே நேரத்தில் உயிர்த்தெழுவார்கள் (யோவான் 5:28). இது கடைசி நாளில் சம்பவிக்கும் (யோவான் 6:39, 40, 44, 54), அவ்வேளையில் அனைவரும் நியாயந்தீர்க்கப்படுவார்கள் (யோவான் 12:48).*[10] *சூரியன் பிரகாசிக்கும் காலம் வரைக்கும், சூரியனைச் சுற்றி பூமி சுழன்று கொண்டிருக்கும் காலம் வரை அது அச்சின் மேல் சுழன்று கொண்டிருக்கும் வரை, நாட்கள் தொடர்ந்து வரும். இயேசு மறுபடியும் வரும்பொழுது, இந்த பிரபஞ்சம் கடந்து போகும், அதன்பின்பு நாட்கள் வராது. உயிர்த்தெழுதல் இப்பிரபஞ்ச "கடைசிநாளிலே" இடம் பெறும். மரித்தவர்கள் நியாயத்தீர்ப்புக் கென்று உயிர்த்தெழுந்தபின்பு, வானங்களும் பூமியும் கடந்து போகும் (2 பேதுரு 3:10; வெளிப்படுத்தின விசேஷம் 20:11).*

*கொலோசெயர்கள் இயேசுவால் உயிர்த்தெழுதலுக்கும் அவருடைய* ***மகிமையுள்ள*** *வருகையின்போது அவரோடேகூட பங்கடையும் படியாகவும் எதிர்பார்த்துக் கொண்டிருக்க முடியும். யோவான், "இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாமும் இருப்போம்" (1 யோவான் 3:2ஆ) என்று எழுதினார். பவுல் எழுதிய போது இயேசு "நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" (பிலிப்பியர் 3:21அ), என்றார்.*

*மரணத்துக்குப் பின்பு, சரீரமானது பூமியிலேயே நின்று விடுகிறது, ஆத்துமா பிரிந்து பாதாளத்துக்குச் செல்லுகிறது (ஆதியாகமம் 35:18; நடபடிகள் 2:27, 31). இயேசு மறுபடியும் வரும்பொழுது, மரித்த எல்லாருடைய சரீரங்களையும் உயிர்த்தெழப் பண்ணுவார் (யோவான் 5:28, 29) மறுரூபமாக்கப்பட்ட சரீரங்களை அவர்களுடைய ஆத்துமாக்களுடன் மறுபடியும் இணைப்பார், அவ்வேளையில் பாதாளம் அவர்களை ஒப்புவிக்கும் (வெளிப்படுத்தின விசேஷம் 20:11-13). அடுத்ததாக, இயேசு தமது சிங்காசனத்தின் மேல் அமருவார், இப்போதைய இப்பிரபஞ்சம் முடிவுறும் (2 பேதுரு 3:10; வெளிப்படுத்தின விசேஷம் 20:11). அதற்குப் பின்பு, இயேசு சகல மனுஷர்களையும் நியாயந்தீர்ப்பார் - உயிர்த்தெழுந்தவர்களையும் அதுவரை உயிரோடிருக்கிற அனைவரையும் தீர்ப்பார்.*[11] *பிறகு, இயேசு ராஜ்யத்தை பிதாவினிடத்தில் ஒப்புக் கொடுப்பார் (1 கொரிந்தியர் 15:24-27).*

*"நீங்கள் ... அவரோடே கூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்" என்ற வாக்கியம் கொலோசெயர்களுக்கு அவர்கள் கிறிஸ்துவுடனே புதிய ஜீவனுடையவர்களாய் வாழும்படி எடுத்துக் கொண்ட பிரயாசம் அவரோடு கூடிய மகிமையாக அளிக்கப்படும் என்ற அமைதியான உறுதியளித்திருக்க வேண்டும். மகிமையுள்ள இந்த உறுதி இயேசுவோடு கூட மறைந்திருந்த தன்மை ஆவிக்குரிய வாழ்க்கையில் அவர்கள் பட்ட பிரயாசங்களைச் சார்ந்திருக்கும். அவர்கள் பூமியிலே அந்நியர்களாயிருந்தார்கள்; ஆனால் இப்பொழுது அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய சுய தேசம், அவர்கள் கொண்டிருந்த குடியிருப்பாகிய, பரலோகத்தில் இயேசுவோடு இருப்பார்கள் (பிலிப்பியர் 3:20). அவர்களுடைய சரீரம் இயேசுவின் மகிமையுள்ள சரீரத்துக்கு ஒப்பாக மாற்றப்படும். அவர்களும், இரட்சிக்கப்பட்ட அனைவரும், பூமிக்குரிய அழிவுள்ள சரீரத்திலிருந்து விடுபட்டு, அழிவில்லாததும், ஆவிக்குரியதுமான*

*சரீரம் கொடுக்கப்படுவார்கள் (காண்க 1 கொரிந்தியர் 15:42, 43; 2 கொரிந்தியர் 5:1, 2).*

## பயன்பாடு

**கிறிஸ்துவோடு எழுப்பப்பட்டவர்களுக்கு புதிய வழிகாட்டல் உண்டாயிருக்கிறது (3:1, 2)**

*கொலோசெயர்கள் ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவுடனே கூட எழுப்பட்டவர்களாயிருந்தனர் (வசனம் 1அ; 2:12). எப்படியிருப்பினும், அவரோடேகூட எழுப்பப்பட்டிருப்பது உடனடி வளர்ச்சியை கொடுத்து விடாது. ஒரு பொறுமையோடு கூடிய கிறிஸ்தவ குணாதிசயம் விரிவாக்கப்பட பிரயாசம் தேவை. இது இயேசுவின் பரலோகத்துக்குரிய வாழ்க்கையின் அணுகுமுறையையும் உட்படுத்தியது. புதியதாய் பிறந்த கிறிஸ்தவர்கள், குழந்தைகளைப் போல ஞானஸ்நானமாகிய ஆவிக்குரிய பிறப்பிலே புதிய வாழ்வைத் தொடங்கினவர்கள் (யோவான் 3:3-5). அவர்களுக்கு ஆவிக்குரிய விதமாக வளர்ச்சி தேவ வசனமாகிய பால் அவசியமாயிருக்கிறது (1 பேதுரு 2:2).*

*கிறிஸ்தவர்கள் கிறிஸ்து வாசம் பண்ணுகிற மேலான இடத்தையே நோக்கிப் பார்க்க வேண்டியவர்கள் (வசனங்கள் 1ஆ, 2), நமது ஆர்வமெல்லாம் உலகத்துக் குரியவைகளாயிராமல் தேவனுக்குரியவைகளாயிருக்க வேண்டும் (1 யோவான் 2:15-17). நாம் பூமிக்குரிய காரியங்களிலே மிகவும் ஒட்டிக் கொண்டவர்களைப் போல மாறிவிடக் கூடாது. நாம் பரலோகத்துக்குரிய காரியங்கள் மீது கவனம் செலுத்துவோமானால் இதை தவிர்த்துவிட முடியும். ஒரு கப்பல் ஓட்டும் மாலுமி தான் சென்று சேர வேண்டிய இலக்கை அறிந்திருக்க வேண்டும். மேலும் தனது கப்பலை அவசியமான துறைமுகத்தை நோக்கி செலுத்த வேண்டும். அவனுடைய இலக்கிலிருந்து அவனுடைய கவனத்தைத் திருப்ப அநேக ஆர்வமிக்க சம்பவங்கள் நிகழக்கூடும், அவன் தன் பயணத்தை வெற்றிகரமாய் நிறைவேற்ற ஏதுவாக அவன் தன் கப்பலை முறையான நிலையில் செலுத்த வேண்டும்.*

*நாம் பரலோகத்திற்குரிய ரீதியில் காரியங்களை கைக் கொள்ள வேண்டும். கிறிஸ்தவர்களாகிய நமது இலக்கு மேலான ஒன்று: நாம் வாழும் பரியந்தம், தொடர்ந்து முயற்சித்தாலும், கிறிஸ்துவுக்கு ஒப்பான தகுதியை முழுமையாய் நாம் பெருக்கிக் கொள்ள இயலாது. கிறிஸ்தவ ஜீவியத்தின் அழகே அது ஒரு தொடர் சவாலாக எடுத்துக் கொண்டு எல்லா வகையிலும் கிறிஸ்துவுக்கு ஒப்பாக மாற மேலும் மேலும் பிரயாசப்படுதலை முன் நிறுத்துவதில் இருக்கிறது.*

*கிறிஸ்துவின் வளர்ச்சிக்கு அளவாக கிறிஸ்தவன் ஒருபோதும் முழுமையாய் வளர இயலாது; பரிபூரணத்தை ஒருபோதும் அடைய முடியாது, ஆகிலும் இயேசுவைப் பின்பற்றுவோருக்கு அதுதான் இலக்காக இருக்க வேண்டும். ஒரு உயரம் தாண்டும் நபர் தான் சிறப்பாக தாண்டுவதற்கும் மேலாக சற்று உயர்த்தி, அளவுகோலை வைத்து பயிற்சி எடுப்பார், அதே போல்தான் பவுலும் தன்னால் இயன்ற அளவு சிறப்பாகச் செய்ய கிறிஸ்துவினிமித்தம் பிரயாசப்பட்டார் (பிலிப்பியர் 3:12-14).*

*கிறிஸ்தவனுக்கு முன்மாதிரி இயேசு (1 கொரிந்தியர் 11:1; 1 யோவான் 2:6). ஒரு ஓவியம் தீட்டுவதில், ஒரு ஓவியன் வழக்கமாக ஒரு விளக்கமான உருவத்தை படைக்க முற்படுகிறான். இது அவன் வரையும் உருவத்தின் நிஜத்தை மறுபடியும் மறுபடியும் பார்த்துக் கொண்டே மிகக் கவனமாக வேலை செய்து, ஒரு பூரணப்பட்ட பிம்பத்தை உருவாக்க முயற்சிக்கிறான். கிறிஸ்தவர்களும் இயேசுவின் ஆவிக்குரிய தகுதியாம்சங்களைப்பெற அப்படியே செயல்பட வேண்டும் (எபேசியர் 4:13).*

### ***கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிற ஒரு ஜீவன் (3:3)***

*ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தைப் பெற்றதாக பவுல் சொன்னார், அது அவர்கள் தங்கள் பாவத்துக்காக மரித்த ஆவிக்குரிய மரணத்தை அடையாளப்படுத்தியது, அதன் பலனாக பாவத்திலிருந்து விடுதலை பெற்ற புதிய ஜீவன் உண்டாகிறது (ரோமர் 6:3, 4, 17, 18). ஞானஸ்நான நேரத்தில், பழைய ஜீவன் (வாழ்க்கை) முடிவுக்கு வந்து கிறிஸ்துவினிமித்தம் புதிய ஜீவன் துவக்கம் பெறுகிறது (வசனம் 3அ). குளிக்காமலேயே இருந்து விட்ட ஒரு நபர், பிறகு ஒரு பயன்பாட்டு உதாரணத்தை வைக்கிறான்: சகல அசுத்தமும், அல்லது சகல பாவமும், ஒரு ஆவிக்குரிய குளியலைப் பெறும்போது, கடந்த காலத்தின் காரியங்கள் அனைத்தும் அகற்றப்படுகிறது.*

*கிறிஸ்தவனுக்குரிய அடைக்கலம் தேவனுக்குள் கிறிஸ்துவுடனே பெறுகிற பாதுகாப்புதான். அவருக்குள் அடைக்கலம் தேடுவோமானால், உலகம் நம்மை கண்டுபிடிக்கவோ வலையில் அகப்படச் செய்யவோ தன் பொல்லாத வழிகளில் கிக்கவைக்க இயலாது. நாம் தேவனுக்குள் கிறிஸ்துவுடனேகூட நிலைத்திருக்கிற வரைக்கும் கேடுபாடான வழிகளுக்கு மறைந்திருக்கிறோம் (வசனம் 3ஆ).*

### ***கிறிஸ்து வரும் போது நாம் பெறும் மகிமை (3:4)***

*இந்த உலகம் கிறிஸ்தவர்களை மகிமைபெற்ற நிலையில் காண்பதில்லை, ஏனெனில் நாம் எதிர்காலத்தில் பெறப்போகிற மகிமையை இன்னும் பெறவில்லை. நாம் உலகத்தின் பார்வையில் மறைந்திருக்கிறோம் என்பது அது நம்மை தேவனுடைய பிள்ளைகளாக உணர்ந்து கொள்வதில்லை என்ற பொருளில் பேசுகிறது (1 யோவான் 3:1). கிறிஸ்து நம்மை மகிமையிலே சேர்த்துக் கொள்ளும்படி மறுபடியும் வரும்போது, அதற்குப் பின்பும் நாம் மறைக்கப்பட்டவர்களாயிராமல் அவரோடே கூட வெளிப்படக் கூடியவர்களாயிருப்போம், அவரது சாயலைத் தரித்துக் கொண்டிருப்போம் (வசனம் 4; பிலிப்பியர் 3:21; 1 யோவான் 3:2).*

*கிறிஸ்தவர்களைப் பொறுத்தமட்டில், ஒரு முழுமையான இலக்கு இந்த அழிவுள்ளதும், தற்காலிகமானதுமான உலகத்தின் முடிவின் போது, மகிமையை அடைவதுதான் (2 கொரிந்தியர் 4:18). "நித்தியமானதும் ஒப்பிடக் கூடாததுமாகிய கனமகிமையைப்" பெறும் போது நமது சகலவித போராட்டங்களும் சோதனைகளும் பிரயோஜனமுள்ளவையாக இருக்கும் (2 கொரிந்தியர் 4:17).*

குறிப்புகள்

[1]மேலும் காண்க *ரோமர் 12:1; 1 கொரிந்தியர் 15:58; 2 கொரிந்தியர் 5:17; கலாத்தியர் 5:1; எபேசியர் 4:1; பிலிப்பியர் 4:1.* [2]J. B. Lightfoot, *St. Paul's Epistles to the Colossians and to Philemon,* rev. (London: Macmillan & Co., 1916), 207. [3]Robert G. Bratcher and Eugene A. Nida, *A Translators Handbook on Paul's Letters to the Colossians and to Philemon*, Helps for Translators (New York: United Bible Societies, 1977), 74. [4]காண்க *நடபடிகள் 2:34; 5:31; 7:55; ரோமர் 8:34; எபேசியர் 1:20; எபிரெயர் 1:3; 8:1; 10:12; 12:2; 1 பேதுரு 3:21, 22.* [5]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 1065. [6]காண்க *மத்தேயு 10:30; மாற்கு 8:17; லூக்கா 6:22, 38; யோவான் 14:1; யாக்கோபு 4:14.* [7]William Hendriksen, *Exposition of Colossians and Philemon,* New Testament Commentary (Grand Rapids, Mich.: Baker Book House, 1964), 141. [8]காண்க *யோவான் 11:25; 14:6; 20:31; 2 கொரிந்தியர் 4:10-12; 2 தீமோத்தேயு 1:1.* [9]J. W. McGarvey and Philip Y. Pendleton, *Commentary on Thessalonians, Corinthians, Galatians and Romans* (Cincinnati: Standard Publishing Foundation, n.d.), 20. [10]மேலும் காண்க *மத்தேயு 25:31, 32; 2 கொரிந்தியர் 5:10; வெளிப்படுத்தின விசேஷம் 20:11, 12.*

[11]*மத்தேயு 25:31-46; யோவான் 5:22; நடபடிகள் 10:42; 17:31; 2 கொரிந்தியர் 5:10; 2 தீமோத்தேயு 4:1.*